புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635    T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 278 | 13-04-2026 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volume 01 | Issue: 278 | 13-04-2026 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## வரும் 16ம் தேதி சிறப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடர் நாடாளுமன்றம், சட்டப்பேரவையில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு:

### புதிய சட்டத்திற்கு ஆதரவுகோரி அனைத்து கட்சி தலைவருக்கு பிரதமர் மோடி கடிதம்



புதுடெல்லி: ஏப்.13–

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் சட்டத்திருத்த மசோதாக்களை ஒருமனதாக நிறைவேற்ற ஆதரவு கோரி அனைத்து கட்சி தலைவர்களுக்கும் பிரதமர் மோடி கடிதம் எழுதியுள்ளார். கடந்த 2023ம் ஆண்டில் ஒன்றிய அரசு கொண்டு வந்த 33 சதவீத மகளிர் இட ஒதுக்கீடு மசோதாக்களுக்கு அனைத்து கட்சிகளும் ஒருமனதாக ஆதரவு அளித்திருந்தன. இதன் தொடர்ச்சியாக, வரும் 16ம் தேதி தொடங்க உள்ள நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் இந்த மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக இரு அவைகளின் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் பிரதமர் மோடி கடிதம் எழுதியுள்ளார்.

அதில், 'நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, 'நாரி சக்தி வந்தன் அதினியம்' சட்டத்தை அதன் உண்மையான நோக்கத்தில் நாடு முழுவதும் அமல்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். 2029ம் ஆண்டு நடைபெற உள்ள லோக்சபா தேர்தல் மற்றும் சட்டப்பேரவை தேர்தல்களை மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டுடன் நடத்துவது அவசியமானது. பெண்களுக்கு நாம் செய்ய வேண்டிய முக்கியமான பொறுப்பை நிறைவேற்ற உங்களது ஆதரவு தேவை' என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் லோக்சபா இடங்களின் எண்ணிக்கை 543 என்பதில் இருந்து 816 ஆக உயரும். அதில் 273 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும். மக்கள் தொகையில் பாதியாக உள்ள பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வாய்ப்புள்ளது. முன்னதாக, 2027ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னரே இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும் என்ற நிலை இருந்தது. ஆனால், தற்போது 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே இதனை அமல்படுத்தும் வகையில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த மசோதாக்களை நிறைவேற்ற நாடாளுமன்றத் தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்பதால், எதிர்க்கட்சிகளின் ஆதரவை பாஜக நாடியுள்ளது. இதுகுறித்து பிரதமர் மோடி தனது கடிதத்தில், 'நாடாளு மன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது என்பது தனிப்பட்ட கட்சிக்கோ அல்லது நபருக்கோ அப்பாற்பட்டது. பெண்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கான நமது பொறுப்பை நிரூபிக்க இதுவே சரியான தருணம். அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற அனைத்து கட்சிகளின் நீண்டகால விருப்பத்தை நனவாக்க இதுவே உகந்த காலம்' என்று தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கூடிய ஒன்றிய அமைச்சரவை, 131வது அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதா, தொகுதி மறுவரையறை மசோதா மற்றும் டெல்லி, புதுச்சேரி, ஜம்மு காஷ்மீர் போன்ற சட்டப்பேரவை கொண்ட யூனியன் பிரதேசங்களுக்கும் இடஒதுக்கீட்டை விரிவாக்கம் செய்யும் மசோதா ஆகிய மூன்றிற்கும் ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அரசியலமைப்பு சட்ட நிபுணர்களுடன் ஆலோசிக்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் மோடி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இனிவரும் 10 நாட்களும் மக்களோடு மக்களாக உடன்பிறப்புகள் களப்பணி ஆற்ற வேண்டும்:

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை: ஏப்.13–

நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவனான என் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார். 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவிற்கு இன்னும் பத்து நாட்களே உள்ளன. செல்லும் இடம் எங்கும் கழக உடன்பிறப்புகளின் எழுச்சியைக் காண்கிறேன். தமிழ்நாட்டு மக்களிடம் மகிழ்ச்சியைக் காண்கிறேன்.

ஐந்து ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் ஒவ்வொன்றும் மக்களுக்குத் தந்திருக்கக் கூடிய பயனும், தொடரவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் நாம் நிறைவேற்றவிருக்கும் சாதனைத் திட்டங்களின் மீதான மக்களின் எதிர்பார்ப்பும் அனைத்து தொகுதிகளிலும் வெளிப்படுகிறது.

தேர்தல் களத்தில் திமுக தொண்டர்களின் பணி என்பது எதிரிகளாலும் வியந்து பார்க்கக் கூடியது என்பதே நம் வரலாறு. கடந்த ஓராண்டுக்கு மேலாக தமிழ்நாட்டில் உள்ள 75,000 பாகங்களிலும் கழக உடன்பிறப்புகள் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து வந்திருக்கிறார்கள். மக்களுடனான நம் உறவு எப்போதும் தொடர வேண்டும். குறிப்பாக இனிவரும் 10 நாட்களும் மக்களோடு மக்களாக உடன்பிறப்புகள் களப்பணி ஆற்ற வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீடு வீடாக சென்று துண்டறிக்கைகளை வழங்கி வாக்குகளைச் சேகரிப்பதில் முழுமையான கவனம் செலுத்துவதுடன், கூட்டணிக் கட்சியினர் போட்டியிடும் தொகுதிகளிலும் உங்களில் ஒருவனான நானே நிற்கிறேன் என்ற எண்ணத்துடன் களப்பணியாற்றி வெற்றியை உறுதி செய்ய வேண்டும்.

92 வயது நிறைந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்கள் கடும் வெயிலிலும் பரப்புரை செய்கிறார். அகவை 80ஐ தாண்டிய அண்ணன் சிதம்பரமும், அண்ணன் வைகோவும் மூலை முடுக்கெல்லாம் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்பதன் அருமையை விளக்கி வருகின்றனர்.

87 வயதான நம் கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் துரைமுருகன் அவர்களும், 28 வயதே ஆன அவிநாசி கழக வேட்பாளர் டாக்டர் கோகிலாமணியும் பம்பரமாகக் களத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் பணியாற்றி வருகிறார்கள்.

உடன்பிறப்புகளான உங்களின் உழைப்பின் மீது உள்ள நம்பிக்கையில் உறுதியுடன் சொல்கிறேன், இந்த தேர்தல் களத்தில் நாம்தான் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்போம். இதை மக்கள் முடிவு செய்து விட்டார்கள். குறிப்பாகத் தமிழ்நாட்டு பெண்கள் முகத்தில் வெளிப்படும் மலர்ச்சியும், இளைஞர்களின் மனதில் உள்ள நம்பிக்கையும், சிறுபான்மைச் சமுதாயத்தினர் உள்ளிட்ட அனைத்து மக்களின் ஆதரவும் நமது வெற்றிக்கு அடித்தளமாக உள்ளன. வாக்குப்பதிவு நாளில் அதை வெற்றியாகக் கட்டி எழுப்ப வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

முற்றிய நெற்கதிரைக் கவனமாக அறுவடை செய்வதுதான் தேர்தல் களப்பணி என நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் பலமுறை சுட்டிக்காட்டி இருக்கிறார். அதைத்தான் உங்களில் ஒருவனான நானும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம். 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்பதை உறுதி செய்யும் உழைப்பை உடன்பிறப்புகள் வழங்கினால் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிதான். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.

ஒற்றுமையாகவும் ஒருங்கிணைப்புடனும் உடன்பிறப்புகள் ஓயாது உழைக்கிறார்கள் என்ற செய்தி என் காதுக்கு வரும்போது எல்லாம் நான் உற்சாகத்துடன் உங்களை மிஞ்சும் உழைப்பை வழங்கும் ஆற்றலைப் பெறுகிறேன். கொளுத்தும் வெயிலையும், கோடை மழையையும் பொருட்படுத்தாமல் களத்தில் பணியாற்றுகின்ற உடன்பிறப்புகளுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சலிக்காமல் உழைப்பதில் நம் உடன்பிறப்புகளுக்கு நிகர் யாருமில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கின்ற உங்கள் உழைப்பினால், தோழமைக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து நீங்கள் ஒற்றுமையாக ஆற்றுகின்ற பணியினால், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியை உறுதி செய்து, இந்தியாவுக்கே வழிகாட்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சியை நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் அமைத்துக் காட்டினார்கள் என்ற பெருமையை விட உங்களில் ஒருவனான எனக்கு வேறென்ன வேண்டும்!

## போர் பதற்றங்களுக்கு மத்தியில் சவூதிக்கு 18 போர் விமானங்களை அனுப்பியது பாகிஸ்தான் : 13,000 ராணுவ வீரர்களும் பயணம்

சவுதி: ஏப்.13–

மண்டல பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் நாட்டு போர் விமானங்கள் மற்றும் ராணுவ வீரர்கள் சவூதி அரேபியாவிற்கு அதிரடியாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். பாகிஸ்தான் மற்றும் சவூதி அரேபியா இடையே கடந்த 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முக்கிய தற்காப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒரு நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதலை இரு நாடுகளுக்குமான தாக்குதலாக கருதி எதிர்கொள்ள வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய சாரம்சமாகும். முன்னதாக, பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் வகையில் சவூதி அரேபிய நிதி அமைச்சர் முகமது அல் ஜடான் இஸ்லாமாபாத் வந்து பல்வேறு நிதியுதவிகளை அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று சவூதி அரேபியாவின் கிழக்கு மாகாணத்தில் உள்ள மன்னர் அப்துல் அஜிஸ் விமான படைத்தளத்திற்கு பாகிஸ்தான் ராணுவத்தின் ஒரு குழு வந்தடைந்ததை சவூதி பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இதில் 10 முதல் 18 போர் விமானங்கள் மற்றும் சுமார் 13,000 ராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே கடந்த 40 நாட்களாக நடந்து வந்த போரை நிறுத்த, கடந்த 8ம் தேதி இரண்டு வார கால தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைதி பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் தற்போது இஸ்லாமாபாத்தில் முன்னின்று நடத்தி வருகிறது.

இந்த சூழலில் சவூதிக்கு போர் விமானங்களை அனுப்பி வைத்தது குறித்து அதிகாரிகள் தரப்பில், 'ஈரான் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சவூதியின் எரிசக்தி கட்டமைப்புகளை பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அமைதி பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் அதே வேளையில், வளைகுடா நாடுகளுடனான ராணுவ உறவை வலுப்படுத்தவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இஸ்ரேல் தனது தாக்குதலை லெபனானில் நிறுத்தாததால் இந்த பிராந்தியத்தில் பதற்றம் நீடிக்கிறது.

## தமிழகத்தில் ராகுல் பிரச்சாரம் தாமதமாவது ஏன்?

### காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் விளக்கம்



சென்னை: ஏப்.13–

நாடாளுமன்ற கூட்டத்தொடர் மற்றும் அனைத்துக்கட்சி கூட்டங்கள் நடைபெற்று வருவதால் ராகுல், பிரியங்கா ஆகியோரின் தமிழக வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளது என காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடும் 28 தொகுதிகளுக்கான மேலிடப் பார்வையாளர்களின் ஆலோசனைக் கூட்டம் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்றது. தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அகில இந்திய காங்கிரஸ் மூத்த பார்வையாளர்கள் முகுல் வாஸ்னிக், உத்தம்குமார் ரெட்டி, குவாசி நிசாமுதின், தமிழகப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், ஏஐசிசி செயலாளர்கள் சூரஜ் எம்.என்.ஹெக்டே, நிவேதித் ஆல்வா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிரச்சாரப் பாடல்: அதைத் தொடர்ந்து, இளைய கம்பன் எழுதி, ஸ்டீபன் ராயல் இசையமைப்பில் உருவான 'தாய்க்கும் தாயான கட்சி' என்ற காங்கிரஸ் கொள்கை முழக்கப் பிரச்சாரப் பாடல் வெளியிடப்பட்டது.

கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் கிரிஷ் சோடங்கர் கூறியதாவது: நாடாளுமன்ற கூட்டத்தொடர் மற்றும் அனைத்துக்கட்சி கூட்டங்கள் நடைபெற்று வருவதால் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோரின் தமிழக வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் தமிழகத்தில் அவர்கள் பிரச்சாரத்தைத் தொடங்குவார்கள்.

ஒரே மேடையில்.. புதுச்சேரி பிரச்சாரத்தின் போது ராகுல் காந்தி கேரளா செல்ல வேண்டியிருந்ததாலும், தமிழக முதல்வர் ஸ்டாலின் முன்கூட்டியே திட்டமிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேண்டியிருந்ததாலும் அவர்கள் ஒரே மேடையில் தோன்றவில்லை. இதை வைத்து சில கட்சிகள் கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றன.

ஆனால், மிக விரைவில் ராகுல் காந்தியும், முதல்வர் ஸ்டாலினும் இணைந்து பிரம்மாண்டப் பிரச்சாரத்தை மேற்கொள்வார்கள். காங்கிரஸ் பேரியக்கத்தின் உண்மையான தொண்டர்கள் எப்போதும் காங்கிரஸில்தான் இருப்பார்கள். அவர்கள் வெளியே செல்ல மாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## "தவெக ஆட்சியில் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்"

### கன்னியாகுமரியில் விஜய் வாக்குறுதி

'தவெக ஆட்சியில் நாட்டின் ஏஐ தலைநகராக தமிழ்நாடு மாறும். தமிழகத்தில் முதல் ஏஐ தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். தமிழகத்தில் ஏஐ நகரம் உருவாக்கப்படும். தவெக ஆட்சியில் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்' என தவெக தலைவர் விஜய் கூறினார்.

கன்னியாகுமரியில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய விஜய், "என் நெஞ்சில் குடியிருக்கும் கன்னியாகுமரி, காரைக்குடி மக்களுக்கு வணக்கம். அன்று காரைக்குடியில் என்னால் பேச முடியாமல் போனது. இப்போது தவெக ஆட்சியின் சில திட்டங்களை அறிவிக்கிறேன். தவெக அரசு அமைந்தால், நம் ஆட்சியில் லஞ்சம் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் நலத்திட்டம் போய் சேரும். அதற்காக ஆதார் அட்டை போல தமிழகத்தில் ஒரு அடையாள அட்டை உருவாக்கப்படும். ஏஐ தரவுடன், லஞ்சம் இல்லாமல் நலத்திட்டங்கள் இந்த அட்டை மூலம் வழங்கப்படும். இதற்கு விண்ணப்பிக்க தேவையில்லை.

இப்போது அரசு அலுவலகங்களில் நமக்கு ஒரு வேலை ஆக வேண்டுமானால், பல்வேறு இழுத்தடிப்புகள் செய்கிறார்கள். இதற்கு காரணம் லஞ்சம் தான். இவ்வாறு வாங்கப்படும் லஞ்சம் அதிகாரிக்கு மட்டுமின்றி, அமைச்சருக்கும் செல்கிறது.

அதேபோல, தவெக ஆட்சியில் தமிழ்நாடு சேவை உறுதி திட்டம் உருவாக்கப்படும். ஆப் மூலமாக ஓட்டுநர் உரிமம் உள்ளிட்டவற்றை இடைத்தரகர் இல்லாமல், லஞ்சம் இல்லாமல் பெறலாம். பட்ஜெட்டை ஒரு ஆவணமாக மட்டும் நமக்குத் தெரியும். அந்த நிதி எங்கே செல்கிறது என நமக்கு தெரியாது. அது சிதம்பர ரகசியம் போல ஸ்டாலின் சார் ரகசியமாக உள்ளது.

தவெக ஆட்சியில், இணைய தளம் மூலமாக அரசின் திட்டங்களுக்கு மக்கள் ஆலோசனை வழங்கலாம், பட்ஜெட்டை கண்காணிக்கலாம். நாட்டின் ஏஐ தலைநகராக தமிழ்நாடு மாறும். தமிழகத்தில் முதல் ஏஐ தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். தமிழகத்தில் ஏஐ நகரம் உருவாக்கப்படும். தவெக அரசின் கீழ் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்.

தமிழகத்தில் நிதி இறையாண்மை கொண்ட மாநிலமாக மாற்றப்படும். நம் மாநிலத்தின் கடன் 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது, இதனை மாற்ற வேண்டும். இதுபோன்ற ஆட்சி நமக்கு வேண்டும். இதுவரை நம்மை ஏமாற்றிய அனுபவசாலிகளின் ஆட்சி போதும்' எனத் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி காங்கிஸ் கட்சி வேட்பாளர் செல்வகுமார் சாப்பர்த்தி பஞ்சாயத்து மோரன அள்ளி கிராமத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது பொதுமக்களுக்கு அன்பளிப்பு வழங்கியதை படம் பிடித்த தனியார் நாளிதழ் செய்தியாளர் மீது கொலை வெறி தாக்குதல்.



கிருஷ்ணகிரி. ஏப்.13–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் செல்லகுமார் ஆதரவாளர்கள் மற்றும் திமுக மேற்கு ஒன்றிய சரவணன் ஆகியோர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சாப்பர்த்தி பஞ்சாயத்து மோரன அள்ளி கிராமத்தில் பிரச்சாரத்தின் போது பொதுமக்களுக்கு பரிசாக தாம்புலம் தட்டு வழங்கியதை வீடியோ எடுத்த தனியார் நாளிதல் செய்தியாளர் கவியரசு மீது கொலை வெறி தாக்குதல்.

காவேரிப்பட்டினம் அருகே தேர்தல் பிரச்சாரத்தில் பரபரப்பு: வீடியோ எடுத்த நபர் தாக்கப்பட்டதாக குற்றச்சாட்டு.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது வீடியோ பதிவு செய்த நபர் தாக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் செல்லகுமார் அவர்கள், காவேரிப்பட்டினம் அருகே உள்ள மோரண அள்ளி கிராமத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவருடன் திமுக ஒன்றிய செயலாளர் சரவணன் ஆகியோர் பிரச்சார வாகனத்தில் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

பிரச்சார வாகனம் கிராமத்துக்குள் வந்தபோது, சிலர் அதை புகைப்படம் மற்றும் வீடியோவாக பதிவு செய்து கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரச்சாரம் முடிந்து வாகனம் சென்ற பின், அங்கிருந்த பொதுமக்களுக்கு சில்வர் தாம்பூல தட்டுகள் இலவசமாக வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிகழ்வை வீடியோவாக பதிவு செய்து கொண்டிருந்த தனியார் நாளிதல் செய்தியாளர் கவியரசு என்பவரை, அங்கு இருந்த கூட்டணி கட்சியினரான காங்கிரஸ் மற்றும் திமுக ஆதரவாளர்கள் சேர்ந்து தடுத்ததாகவும், அவரை கீழே தள்ளி செல்போனை பறிக்க முயற்சி செய்து தாக்கியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும், அவரை காலால் உதைத்து தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் இரவு சுமார் 9:45 மணியளவில் நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு முன், பொதுமக்கள் மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை வேட்பாளரை எதிர்பார்த்து காத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

திமுக கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சி யை சேர்ந்த சுவாமிநாதன் 59 சந்தோஷ் 45 ஜேம்ஸ் 50 சாம்ராஜ் 59 ஆகிய நபர்கள் ஏன் வீடியோ எடுக்கிறாய் வீடியோவை அழித்துவிடு இல்லை என்றால் இங்கயே கொன்று விடுவோம் செய்தி வெளியிட்டாள் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டல் விடுத்து கை பேசியை வாங்க முயற்சி செய்து இழுத்து கீழே தள்ளி காலால் நெஞ்சு பகுதியில் மிதித்து கை பேசியை கலவாடி சென்றனர் அதில் இருந்த பாஸ்வர்ட் தெரியாததால் வீடியோ ஆதாரம் அழிக்க முடியாத நிலையில் பின் நம்பர் கேட்டு அடித்தனர் அப்போது சுதாரித்து கொண்டு நண்பருக்கு போன் செய்து உதவி கேட்டு 108 அவசர ஊர்தி மூலம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் இதனை காவேரிப்பட்டணம் காவல் நிலையத்தில் மயக்கம் தெளிந்து தானாக சென்று புகார் மனு கொடுத்துவிட்டு தன்னுடைய கை பேசி ஆதாரம் அழிய கூடாது என்று கைபேசியை மீட்டு தருமாறு காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்க காவலர்கள் உடன் சென்று தனது கை பேசியை மீட்டு சம்பவம் குறித்து செய்தி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் ஐயா அவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம் தகவலை பகிர்ந்தார்கள்.

சம்பந்தப்பட்ட குண்டர்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து பரிசு வழங்கிய சுமதி கலா சந்தோஷ் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகாத நிலையில், சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செஞ்சி செக்கோவர் தொண்டு நிறுவனம் சார்பில் 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு என்ன படிக்கலாம் என்ற வழிகாட்டுதல் நிகழ்ச்சி




செஞ்சி ஏப் 13

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி செக்கோவர் தொண்டு நிறுவனம் சார்பில் 10, 11, 12 மாணவர்களுக்கு அடுத்து என்ன படிக்கலாம் எங்கு சேரலாம் என்ற வழிகாட்டும் நிகழ்ச்சி

நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செக்கோவர் தொண்டு நிறுவன இயக்குனர் அம்பிகா சூசைராஜ் தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக குளோபல் பயிற்சியாளர் டாக்டர் ஆறுமுகம் குருசாமி கலந்து கொண்டு மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்து முதுநிலை வருவாய் ஆய்வாளர் கண்ணன் ஆசிரியர் ராமச்சந்திரன் வேளாண்மை உதவி ஆய்வாளர் கௌதம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்

இதில் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு மேற்படிப்புக்கான சந்தேகங்களை கேட்டு அறிந்தனர்.

நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் செக்கோவர் தொண்டு நிறுவன ஊழியர்கள் கஜெயசீலன், ரவீந்திரன், ராஜாராம், பிலிப்,அரசு, குலசேகர், அரவிந்தன், சுரேஷ் பாபு, சக்திவேல், சிவா ,விஜயரங்கன் சங்கீதா, கோடீஸ்வரி, செல்வி பிரசன்னா, ஜனம், கவியரசன், சூர்யா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன்அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள உணவகங்களில் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# காரைக்கால் மீன் பிடித்துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 12 மீனவர்களை கைது செய்தது இலங்கை கடற்படை

காரைக்கால்: ஏப்.13–

காரைக்கால் மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை சிறைபிடித்தது. காரைக்கால் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இலங்கை காரைநகர் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படை, மீனவர்களை சிறைபிடித்தது. சிறை பிடித்த 12 மீனவர்களை காங்கேசன் துறை முகத்துக்கு இலங்கை கடற்படையினர் அழைத்துச் சென்றனர். ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 12 மீனவர்களையும் சிறைபிடித்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளனர் கைது செய்யப்பட்ட மீனவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் மீனவர்கள் மீது யாழ்ப்பாண நீரியல்வள திணைக்களத்தினரால்

இலங்கை நீர் பரப்பு எல்லைக்குள் அடக்கிய யாழ்ப்பாண வடக்கு காரைநகர் கடற்பரப்புக்குள் தலைமையதிபதியால் வழங்கப்படும்

வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் தொடர்பிலான அனுமதிப்பத்திரம் இல்லாது கடல் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமை ,மேற்கூறிய அனுமதி பத்திரம் இன்றி இலங்கை நீர்பரப்பு எல்லைக்குள் நுழைந்து மீன்பிடி வலை, படகு நிற்கின்ற வரைக்கும் தொடக்கறுத்து வைக்காமை ,

காரைநகர் கடற்பரப்புக்குள் வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமை ,போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு நீரியல் வளத் துறையினரால் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக 20 படகுகளுடன் 141 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# திமுக கூட்டணியை ஆதரித்து ஏப். 17 முதல் கமல் பிரச்சாரம்

சென்னை: ஏப்.13–

திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மநீம கட்சித் தலைவர் கமல் ஏப். 17ல் சென்னையில் தனது பிரச்சாரத்தை தொடங்குகிறார். முதல் நாளில் துறைமுகம், பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கத்தில் ஆதரவு திரட்டுகிறார்.

இரண்டாம் நாளில் தி.நகர், மயிலாப்பூர், வேளச்சேரி, சேப்பாக்கம் திருவல்லிக் கேணி, 19ல் அவினாசி, கோவை தெற்கு தொகுதிகளில் பிரச்சாரம் செய்கிறார் 20ம் தேதி, திருச்சி மாவட்டத்தில் திருச்சி கிழக்கு, திருவரங்கம் மற்றும் லால்குடி ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

# சேலம் வெள்ளிப்பட்டறை அதிபரிடம் ரூ 2.16 கோடி மதிப்புள்ள 112 கிலோ கொலுசுகள் பறிமுதல்.

சேலம். ஏப்.13–

சேலத்தில் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில்,உரிய ஆவணங்கள் இன்றி காரில் எடுத்துச்சென்ற ரூ. 2.16 கோடி மதிப்பிலான 112 கிலோ வெள்ளிக் கொலுசுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் ஏப். 23ஆம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி, வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருள்கள் விநியோகத்தை தடுக்க மாநிலம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சேலம் வடக்கு தொகுதிக்கு உள்பட்ட ஆனந்தா பாலம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு பறக்கும் படை அலுவலர் ஜெயந்தி தலைமையிலான குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனையிட்டதில், பைகளில் 112 கிலோ வெள்ளிக் கொலுசுகள் வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

அதற்கு உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாததையடுத்து, ரூ. 2.16 கோடி மதிப்பிலான 112 கிலோ வெள்ளிக் கொலுசுகளை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். விசாரணையில், காரில் வந்தவர் சேலம் புதிய பேருந்து நிலையம் பகுதியைச் சேர்ந்த சுந்தரராஜன் என்பதும், செவ்வாய்ப்பேட்டையில் வெள்ளிப் பட்டறை வைத்திருப்பதும், 112 கிலோ வெள்ளிக் கொலுசுகளை அவர் சென்னைக்கு எடுத்துச் சென்றதும் தெரியவந்தது.

இதையடுத்து, பறிமுதல் செய்யப்பட்ட 112 கிலோ வெள்ளிக் கொலுசுகளை சேலம் வடக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கோட்டை குமாரிடம் பறக்கும் படையினர் ஒப்படைத்தனர். உரிய ஆவணங்களை சமர்ப்பித்துவிட்டு, வெள்ளிக் கொலுசுகளை பெற்றுச் செல்லும்படி வெள்ளிப் பட்டறை அதிபர் சுந்தரராஜனிடம் அறிவுறுத்தப்பட்டது.

# ஏற்காடு மலை கிராமம் மாணவர்களுக்கு கல்விச்சுற்றுலா - யூனிட்டி ஆஃப் யூத் ஃபவுண்டேஷன் முன்னெடுப்பு



சேலம். ஏப்.13–

சேலம் மாவட்டம் ஏற்காடு அருகிலுள்ள செங்கலத்துப்பாடி மற்றும் குண்டூர் கிராமங்களை கடந்த சில ஆண்டுகளாக தத்தெடுத்து சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் Unity of Youth Foundation அமைப்பு, மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், இவ்விரு கிராமங்களிலும் மாலை நேர டியூஷன் மையங்கள் மற்றும் சிலம்பம் பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இம்மையங்களில் பயிலும் மாணவர்களின் அறிவை விரிவுபடுத்தும் நோக்கில், இன்று கல்விச்சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கல்விச்சுற்றுலாவில், மொத்தம் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் கிராம இளைஞர்கள் கலந்து கொண்டு, குருவம்பட்டி உயிரியல் பூங்காவிற்கு சென்று இயற்கை மற்றும் விலங்கியல் தொடர்பான அறிவை பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை ரேஞ்சர் சசிகுமார், Unity of Youth Foundation நிறுவனர் விஜய், மற்றும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் பழனி, . சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்களை கல்வி மற்றும் ஒழுக்கத்தில் முன்னேற ஊக்கு வித்தனர்.

மாணவர்களுக்கு இத்தகைய கல்விச் சுற்றுலா மிகுந்த பயனுள்ளதாக இருந்ததாகவும், எதிர்காலத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்த வேண்டும் என கிராம மக்கள் மற்றும் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சேலத்தில் சென்னை சேர்ந்த மாஜி எஸ்பியிடம் ரூ.60 லட்சம் மோசடி பெண் உள்பட 2 பேர் அதிரடி கைது.





சேலம். ஏப்.13–

சேலம்,ரியல் எஸ்டேட் தொழிலில் முதலீடு செய்வதாக கூறி ஓய்வு பெற்ற கூடுதல் எஸ்பியிடம் ரூ.60 லட்சம் மோசடி செய்த பெண் உள்பட 2 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

சென்னை அடுத்த பல்லாவரம் அருகே பம்மல் பகுதியை சேர்ந்தவர் ஹயாத் (65), ஓய்வு பெற்ற கூடுதல் எஸ்பி. இவர், சேலம் சுக்கம்பட்டியை சேர்ந்த வெங்கடாசலம் என்பவருடன் நட்பாக பழகி வந்துள்ளார். அப்போது வெங்கடாசலத்தின் மனைவி சின்னதங்கம் (42), ரியல் எஸ்டேட் தொழிலை ஜலகண்டாபுரம் வண்டிமேடு பகுதியை சேர்ந்த சுப்பிரமணி (45) என்பவருடன் சேர்ந்து செய்து வந்துள்ளார். அந்த ரியல் எஸ்டேட் தொழிலில் பணத்தை முதலீடு செய்தால், அதிக லாபத்துடன் திரும்ப தருவதாக ஓய்வு கூடுதல் எஸ்பி ஹயாத்திடம் சின்னதங்கம் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பிய ஹயாத், கடந்த 2022ம் ஆண்டு சின்னதங்கத்திடம் ரூ.20 லட்சமும், சுப்பிரமணியிடம் ரூ.40 லட்சமும் கொடுத்து ரியல் எஸ்டேட் தொழிலில் முதலீடு செய்ய கொடுத்துள்ளார். அந்த பணத்தை பெற்ற 2 பேரும், தங்களது தொழிலை பெருக்கிக் கொண்டதோடு, அதன்மூலம் கிடைத்த லாபத்தையோ, கொடுத்த ரூ.60 லட்சம் பணத்தையோ ஹயாத்திற்கு கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளனர். இதுகுறித்து சேலம் மாவட்ட எஸ்பி கௌதம்கோயலிடம் ஓய்வு கூடுதல் எஸ்பி ஹயாத் புகார் கொடுத்தார். அதன்பேரில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர். அதில், ஓய்வு கூடுதல் எஸ்பி ஹயாத்திடம் ரியல் எஸ்டேட் தொழில் முதலீடு என ரூ.60 லட்சம் பணத்தை பெற்றுக் கொண்டு, 3 ஆண்டுகளுக்கும் மேலாக திரும்ப கொடுக்காமல் மோசடி செய்து வந்தது தெரியவந்தது.

இதையடுத்து ரியல் எஸ்டேட் அதிபர்கள் சுப்பிரமணி, சின்னதங்கம் மீது மோசடி, கூட்டுசதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் மாவட்ட குற்றப்பிரிவு போலீசில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் நேற்று, சுப்பிரமணி (45), சின்னதங்கம் (42) ஆகிய 2 பேரையும் குற்றப்பிரிவு போலீசார் அதிரடியாக கைது செய்தனர். பின்னர் அவர்களை சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, மத்திய மற்றும் பெண்கள் கிளைச்சிறையில் அடைத்தனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# பள்ளிகள் கூட குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை

## அன்புமணி ராமதாஸ் ஆவேசம்.

சேலம். ஏப். 13–

சேலம் மாவட்டம் தேவூர் அருகே உள்ள அரசு பள்ளியில் கணித ஆசிரியராக பணிபுரிந்து வந்தவர் பாலசுப்ரமணி(49) வயதான இவர் மீது அப்பள்ளியில் படிக்கும் மாணவிகள் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறி புகார் அளித்தனர்.

இந்த சம்பவம் பெற்றோர் மற்றும் சக ஆசிரியர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், குற்றச்சாட்டுக்கு ஆளான ஆசிரியரை போலீசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் மீது பாலசுப்ரமணி ஏற்கனவே போக்சோ வழக்கு பதியப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், மக்கள் மீது அக்கறை இல்லாத திமுக அரசின் மோசமான செயல்பாடுகளே இந்த அதிர்ச்சி சம்பவத்திற்கு காரணம் என பாமக தலைவரும் ராஜ்யசபா எம்பியுமான அன்புமணி ராமதாஸ் (Anbumani Ramadoss) சாடியுள்ளார். இது தொடர்பாக அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது, "சேலம் மாவட்டம் சங்ககிரியை அடுத்த தேவூர் அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த பி. பாலசுப்பிரமணியன் என்ற ஆசிரியர் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார். அரசு பள்ளிக்கூடங்களைக் கூட மாணவிகளுக்கு பாதுகாப்பாற்றவையாக திமுக அரசு மாற்றி வைத்திருப்பது கண்டிக்கத்தக்கது.



அரசு நடுநிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளை மிரட்டி பாலியல் தொல்லை கொடுத்ததாக ஏராளமான மாணவிகள் புகார் செய்ததன் அடிப்படையில் அவர் கைது செய்யப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. தான் சூனியக்காரன் என்றும், தமது விருப்பத்திற்கு உட்படாவிட்டால் பேயை ஏவி விடுவேன் என்றும் மிரட்டி பல குழந்தைகளை அந்த ஆசிரியர் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாக்கியிருக்கிறார்.

தாய், தந்தை ஆகியோருக்கு அடுத்தபடியாக கடவுளாக மதிக்கப்பட வேண்டியவர்கள் ஆசிரியர்கள். குழந்தைகளுக்கு நல்லொழுக்கங்களைக் கற்றுத் தர வேண்டியவர்களும் அவர்கள் தான். ஆனால், கடவுளாக பார்க்க வேண்டிய ஆசிரியர் ஒருவரே தன்னை சாத்தான் என்று கூறிக் கொண்டு குழந்தைகளை பாலியல் தாக்குதலுக்கு ஆளாக்கியிருக்கிறார் என்றால் அரசு பள்ளிகள் எந்த அளவுக்கு ஆபத்தானவையாக மாறியிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியர் பாலசுப்பிரமணியன் ஏற்கனவே இதே போன்ற செயல்களில் அவர் மீது சூரமங்கலம் காவல் நிலையத்தில் போக்சோ வழக்கு நிலுவையில் உள்ளது. அவ்வளவு மோசமான ஆசிரியர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவரை மாணவிகள் பயிலும் பள்ளிக்கு ஆசிரியராக திமுக அரசு நியமித்திருக்கிறது என்பதிலிருந்தே மாணவர் நலனில் அதற்கு அக்கறை இல்லை என்பதை தெரிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் திமுக அரசு எப்போது பதவி ஏற்றதோ, அப்போதிலிருந்தே பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லாத சூழல் ஏற்பட்டிருக்கிறது.போக்சோ எனப்படும் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின்படி திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன் 2020ஆம் ஆண்டில் 3057 வழக்குகள் பதிவாகியிருந்தன. அது 2021 ஆம் ஆண்டில் 4,415, 2022ஆம் ஆண்டில் 4,906, 2023ஆம் ஆண்டில் 4581, 2024ஆம் ஆண்டில் 6975, 2025ஆம் ஆண்டில் 7000 ஆக அதிகரித்திருக்கிறது. 2020ஆம் ஆண்டு இதே சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகளுடன் ஒப்பிடும் போது இது 3943 , அதாவது 129% அதிகம் ஆகும்.

2021–ஆம் ஆண்டில் 422 பெண்கள், 2022–ஆம் ஆண்டில் 421, 2023–ஆம் ஆண்டில் 365 பெண்கள், அதற்கடுத்த இரு ஆண்டுகளில் 813 பெண்கள் என மொத்தம் 2021 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். திமுக ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுகளில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான குற்றங்களில் எண்ணிக்கை 44,418. அதாவது ஒவ்வொரு நாளும் பெண்களுக்கு எதிராக 25 குற்றங்கள் தமிழ்நாட்டில் நடக்கின்றன.

இந்த புள்ளிவிவரங்கள் அனைத்தும் ஒரு விஷயத்தை தெளிவாக உணர்த்துகின்றன. திமுக ஆட்சியில் இருக்கும் வரை குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பு கிடைக்காது என்பது தான் அந்த உண்மை. தமிழ்நாட்டு மக்களும் அதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதனால், இன்னும் 13 நாள்களில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் திமுகவுக்கு படுதோல்வியை பரிசாக அளித்து விரட்டியடிப்பார்கள்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பெருமாள்பட்டு தனியார் பள்ளி மற்றும் கல்லூரி வளாகம் மற்றும் செவ்வாப்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி கல்லூரியில் சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் ஆய்வு மேற்கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இதில் உதவி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட வருவாய் அலுவலருமான ச.சுரேஷ், உதவி இயக்குநர் (நில அளவை) பேச்சியப்பன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பி.தேவன், பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு கிழக்கில் வெற்றி வாய்ப்பு எனக்கே.. காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் உறுதி..



ஈரோடு. ஏப்ரல் 13

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் ஈரோடு கிழக்கில் வெற்றி எனக்கே என பிரச்சாரத்தில் தீவிரம் காட்டி வருகிறார்.

மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டணியில் ஈரோடு கிழக்குத் தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டது.

அதில் காங்கிரஸ் வேட்பாளராக கோபிநாத் பழனியப்பன் அறிவிக்கப்பட்டார். தொடர்ந்து தனது வேட்பு மனைவியை தாக்கல் செய்த அவர் தொகுதி தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

அவர் வாக்கு சேகரிக்க செல்லும் இடங்களில் அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும், கட்சியினர் மாலை அணிவித்தும் வரவேற்பு தெரிவிக்கின்றனர்.

இதனைத்தொடர்ந்து ஈரோடு கிழக்கு காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனி அப்பன், கிழக்குத் தொகுதி எனக்கே என உறுதியாக தேர்தல் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.




2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட் தலைமை தபால் நிலையம் அருகில் இந்தியன் வங்கி மண்டல அலுவலகம் சார்பில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி பதவி காலியாக உள்ள நிலையில், அப்பொறுப்பை ஐ.ஜி. துரை குமார் கவனிப்பார்: உள்துறை செயலாளர் உத்தரவு

சென்னை: ஏப்.13–

லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி பதவி காலியாக உள்ள நிலையில், அப்பொறுப்பை ஐ.ஜி. துரை குமார் கவனிப்பார் என உள்துறை செயலாளர் உத்தரவு அளித்துள்ளார். டேவிட்சன் தேவாசிர்வாதம் மாற்றப்பட்ட பிறகு, லஞ்ச ஒழிப்புத்துறை டி.ஜி.பி. பதவிக்கு சந்தீப் மிட்டல் நியமிக்கப் பட்டார். பின்னர் அந்த நியமனத்தை தேர்தல் ஆணையம் திரும்பப் பெற்றதை அடுத்து, தற்போது காலியாக உள்ள பதவிக்கு பொறுப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்

தமிழகத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், அரசு நிர்வாகத்தில் முக்கிய மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், தமிழக லஞ்ச ஒழிப்புத்துறையின் இயக்குநர் பதவி காலியாக இருந்த சூழலில், தற்போது அந்தப் பொறுப்பை கவனிப்பதற்கான புதிய அதிகாரியை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, லஞ்ச ஒழிப்புத்துறை டி.ஜி.பி யாக இருந்த டேவிட்சன் தேவாசிர்வாதம் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, அந்த இடத்திற்கு சந்தீப் மிட்டல் நியமிக்கப் பட்டார். இருப்பினும், தேர்தல் ஆணையத்தின் தலையீட்டால் சந்தீப் மிட்டலின் நியமனம் ரத்து செய்யப்பட்டது. இதனால் கடந்த சில நாட்களாக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் பணியிடம் காலியாகவே இருந்து வந்தது.

இந்நிலையில், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன் நேற்று (ஏப்ரல் 11, 2026) வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, தற்போது லஞ்ச ஒழிப்புத்துறை ஐ.ஜியாக (SIC-I) பணியாற்றி வரும் ஏ.டி. துரை குமார் ஐபிஎஸ் லஞ்ச ஒழிப்புத்துறையின் இயக்குநர் பொறுப்பை கூடுதலாகக் கவனிப்பார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

மறு உத்தரவு வரும் வரை அல்லது ஒரு நிரந்தர அதிகாரி நியமிக்கப்படும் வரை, ஐ.ஜி. துரை குமார் லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் பொறுப்பை முழுமையாகக் கவனிப்பார். தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நேரத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை போன்ற முக்கிய பிரிவிற்குப் பொறுப்பு அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளதால், நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் நிர்வாகப் பணிகள் தொய்வின்றி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தவெக பிரச்சார வாகனத்தின் மீது கல்வீச்சு: திமுக நிர்வாகிகள் மூவர் மீது வழக்குப் பதிவு

சென்னை,ஏப்.13–

விருகம்பாக்கம் சட்டப்பேரவைத் தொகுதியில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில், சபரிநாதன் போட்டியிடுகிறார். இவர் நேற்று முன்தினம் விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட திருவீதி அம்மன் கோயில் சந்திப்பு பகுதியில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார். பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அங்கு வந்த நபர் ஒருவர் திடீரென தவெக பிரச்சார வாகனத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தினார்.

இதனால், அதிர்ச்சியடைந்த கட்சித் தொண்டர்களும், நிர்வாகிகளும் அந்த நபரை மடக்கிப் பிடித்த போது. "இது திமுகவின் கோட்டை, இங்கே நீங்கள் நுழையக்கூடாது" எனக் கூறி வாக்கு வாதத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. வாக்கு வாதம் முற்றிய நிலையில், கட்சியின் முக்கியப் பொறுப்பாளர் ராமச்சந்திரனை அந்த நபர் கல்லால் தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, தவெக வழக்கறிஞர் பிரிவு இணை ஒருங்கிணைப்பாளர் பாண்டியராஜன் கோயம்பேடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில், இச்சம்பவத்தில் தொடர்புடைய திமுக நிர்வாகிகள் 3 பேர் மீது வழக்குப் பதிவு செய் துள்ளனர். இது தொடர்பாக, போலீஸார் தொடர்ந்து தீவிர விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.




## தனது 2 பெண் குழந்தைகளை சீரழித்த தந்தைக்கு இரட்டை ஆயுள் தண்டனை : ரூ. 1.64 லட்சம் அபராதம் : பாதிக்கப்பட்ட 2 பேருக்கும் தலா ரூ. 5 லட்சம் இழப்பீடு அரசு வழங்க உத்தரவு

திருவள்ளூர் ஏப் 13

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அடுத்த பட்டாபிராம் பகுதியைச் சேர்ந்தவர் முரளி (36). இவர் கடந்த 2019 ம் ஆண்டு தனது முதல் மனைவியின் 16 வயது மகள் மற்றும் 2 வது மனைவியின் 13 வயது மகள் என 2 பேரையும் பாலியல் வன்கொடுமை செய்து வந்துள்ளார். இதுகுறித்து ஆவடி அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து திருவள்ளூர் போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கு திருவள்ளூர் மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கு விசாரணையில் சிறப்பு அரசு வழக்கறிஞர் புவனேஸ்வரி ஆஜராகி வாதாடினார். இந்நிலையில் இறுதி விசாரணை நடைபெற்றது. வழக்கை விசாரித்த மாவட்ட போக்சோ நீதிமன்ற நீதிபதி உமாமகேஸ்வரி, தான் பெற்ற தனது 2 மகள்களையே பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் முரளிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் ரூ. 1.64 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். அபராதம் கட்ட தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் பாதிக்கப்பட்ட 2 சிறுமிகளுக்கும் தலா ரூ. 5 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு பரிந்துரை செய்தார். இதனை தொடர்ந்து ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் முரளியை புழல் சிறைக்கு கொண்டு சென்று அடைத்தனர்.

## கோவை சூலூர் தொகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட த.வெ.க. வேட்பாளர் சுகுமாரிடம் பெண்கள் சரமாரி கேள்வி

கோவை: ஏப்.13–

கோவை சூலூர் தொகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட த.வெ.க. வேட்பாளர் சுகுமாரிடம் பெண்கள் சரமாரி கேள்வி எழுப்பினர். வார சந்தையில் பெண்களிடம் தவெக வேட்பாளர் சுகுமார் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். விஜய் ஆட்சிக்கு வந்தால் பெண்கள் பாதுகாக்கப் படுவார்கள் என தவெக வேட்பாளர் பரப்புரை செய்தனர்.

சொந்த குடும்பத்தையே பார்க்காத விஜய், மக்களை எப்படி பாதுகாப்பார் என த.வெ.க. வேட்பாளரிடம் கேள்வி. தன் ரத்த உறவுகளையே பார்க்காத விஜய், தமிழ்நாட்டு மக்களை எப்படி கவனிப்பார். காய்கறி வியாபாரிகளிடம் துண்டுப் பிரசுரங்களை வழங்கி தவெக வேட்பாளர் ஆதரவு திரட்டிய போது வாக்குவாதம் செய்தனர். பெண்களின் சரமாரி கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல் த.வெ.க. வேட்பாளர் சுகுமார் திணறினார். த.வெ.க. நிர்வாகிகள், பெண்களை சமாதானம் செய்ய முயன்றும் சரமாரி கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் திணறல்.

மக்களால் தேர்வான முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை விஜய் விமர்சிக்கும் விதத்தை ஏற்க முடியாது என பெண்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஸ்டாலின் சார் என்றுதானே கூறுகிறார் என வேட்பாளர் பதில் சொன்னபோதும் அதனை ஏற்க மறுத்து பெண்கள் கண்டனம். தவெகவில் உள்ள சிறிய வயதினர் கூட, ஒரு தலைவரான முதலமைச்சரை விமர்சிப்பது சரியா என்று கேள்வி எழுப்பினர்.

த.வெ.க.வில் உள்ள இளைஞர்கள், இளம் பெண்கள் கேவலமாக பேசுவதை விஜய் ஏன் கண்டிக்கவில்லை என பெண்கள் கேள்வி. விஜயகாந்தை விட விஜய் ஒன்றும் பெரிய ஆள் இல்லை என பெண்கள் கருத்து தெரிவித் துள்ளனர். பெண்களுக்கு சரிவர பதில் சொல்லாமல் பரப்புரையை பாதியிலேயே முடித்துக் கொண்டு த.வெ.க. வேட்பாளர் கிளம்பினார்.

## தொட்டபெட்டா மலைச் சிகரப் பகுதியில் ஒற்றைக் காட்டு யானை சுற்றிவருவதால், சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிப்பு!

உதகை: ஏப்.13–

உதகை அருகே உள்ள தொட்டபெட்டா மலைச் சிகரப் பகுதியில் ஒற்றைக் காட்டு யானை சுற்றிவருவதால், பாதுகாப்பு கருதி சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. யானையின் நடமாட்டத்தை ட்ரோன் மூலம் வனத்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

# போடியில் தேர்தல் பணிமனையை திமுக வேட்பாளர் பன்னீர்செல்வம், எம்பி தங்கதமிழ்ச்செல்வன் திறந்து வைத்தனர்



தேனி. ஏப்.13

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், காமராஜர் பஜார் சாலையில் ( பொன்னு சினிமாஸ் அமைந்திருந்த இடத்தில்), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், போடி நாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, போடிநாயக்கனூர் நகரத்தில் புதிய தேர்தல் பணிமனை அலுவலகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் முதலமைச்சரும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளருமான ஓ.பன்னீர்செல்வம், தேனி வடக்கு மாவட்ட தி.மு.க.செயலாளர் தங்கதமிழ்செல்வன் ஆகியோர் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தனர். முன்னாள் எம்பி ரவீந்திரநாத், திமுக போடிநாயக்கனூர் நகர் செயலாளர் புருசோத்தமன் ,போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலட்சுமணன் மற்றும் தி.மு.க. மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் போடி சீனிவாச பெருமாள் கோவிலில் போடி தொகுதி திமுக வேட்பாளர் ஓ.பன்னீர் செல்வம் சுவாமி தரிசனம் செய்தார்.மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்தார். போடி கிழக்கு மகாஜன மறவர் சங்க நிர்வாகிகளை சந்தித்தார்.தொடர்ந்து சிசம் ஸ்கூல் அருகில் உள்ள சர்ச் பொறுப்பாளர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார். போடி தொகுதியில் வாக்கு சேகரிக்க சென்ற ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு பொதுமக்கள் சார்பில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# திருவள்ளூரில் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் 5ம் கட்ட பிரசாரம் தொடக்கம்: 6 தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்




சென்னை: ஏப்.13–

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று 5ம் கட்ட பிரசாரத்தை திருவள்ளூரில் தொடங்குகிறார். அன்றைய தினம் திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருத்தணி, பூந்தமல்லி, ஆவடி தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். தமிழக சட்டப்பேரவை தேர்தல் வரும் 23ம் தேதி நடக்கிறது. அதே நேரத்தில் வரும் 21ம் தேதி மாலை வரை மட்டுமே தேர்தல் பிரசாரம் செய்ய முடியும். இதனால் அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

தேர்தலை முன்னிட்டு திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் திமுக மற்றும் கூட்டணிகட்சிவேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்து வருகிறார். கடந்த 31ம் தேதி திருவாரூரில் பிரசாரத்தை தொடங்கிய அவர், தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டார்.பொதுக்கூட்டத்தில் பங்கேற்று எழுச்சியுரையாற்றி வருகிறார். ஒரு நாளைக்கு இரண்டு நகரங்களில் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு பேசி வருகிறார். பிரசாரத்திற்கு செல்லும் இடங்களில் காலையில் நடைபயிற்சி மேற்கொண்டு மக்களிடம் வாக்கு சேகரிப்பிலும் ஈடுபட்டு வருகிறார்.

இதுவரை அவர் 4 கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். இதை தொடர்ந்து 5ம் கட்ட பிரசாரத்தை இன்று திருவள்ளூரில் தொடங்குகிறார். அன்றைய தினம் மாலை 5 மணிக்கு திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருத்தணி, பூந்தமல்லி, ஆவடி தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து திருவள்ளூர் மருத்துவ கல்லூரி சாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

தொடர்ந்து மாலை 7 மணிக்கு ராணிப்பேட்டை, அரக்கோணம் சோளிங்கர், ஆற்காடு தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து ராணிப்பேட்டை அம்மூர் ரோட்டில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். 14ம் தேதி மாலை 5 மணிக்கு வேலூர், காட்பாடி, அணைக்கட்டு, கீழ்வைத்திய நாதன்குப்பம், குடியாத்தம் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து வேலூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். தொடர்ந்து இரவு 7 மணிக்கு திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து திருப்பத்தூர் மண்டலவாடி மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

15ம் தேதி மாலை 5 மணிக்கு பாலக்கோடு, பென்னாகரம், தர்மபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், சேலம் மேற்கு தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து காரிமங்கலம்பெரியாம்பட்டி நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், மாலை 7 மணிக்கு சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து சேலம் சீலநாயக்கன்பட்டியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

16ம் தேதி நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்தி வேலூர்,திருச்செங்கோடு தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து நாமக்கல் பொம்முகுட்டை மேட்டில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், இரவு 7 மணிக்கு குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து பெரம்பலூர் ஒதியம் பிரிவு குன்னத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

# மொடக்குறிச்சி மதிமுக வேட்பாளர் செந்தில் நாதனுக்கு ஆரத்தி எடுத்து ஆதரவு தெரிவித்த பெண்கள்..

## தேர்தல் பிரச்சாரத்தில் பெருகும் பெண்களின் ஆதரவு..



ஈரோடு. ஏப்ரல். 13

மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக கூட்டணியில் மதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் செந்தில் நாதனுக்கு பெண்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலுக்கு இந்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் அடுத்த மாதம் மே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் உள்ள திமுக, மதிமுக, விடுதலை சிறுத்தைகள், சிபிஎம், சிபிஐ, தேமுதிக உள்ளிட்ட 23 கட்சிகள் இந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ளன.

தொடர்ந்து கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி உடன்பாடு ஏற்பட்டு, அண்ணன் தங்கச்சி வாரியாக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு, அவர்களும் தங்கள் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்து தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

நிலையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்கு மதிமுக வேட்பாளராக சா. செந்தில்குமார் அறிவிக்க பட்டார். இதனைத் தொடர்ந்து மொடக்குறிச்சி திமுக கூட்டணியில் மதிமுக வேட்பாளராக போட்டியிடும் செந்தில் நாதன் தொகுதி முழுவதும் பம்பரமாய் சுற்றி வந்து பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்து வருகிறார்.

இந்த நிலையில் தினங்களுக்கு முன்பு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மற்றும் அக்கட்சியின் முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்பி ஆகியோர் மதிமுக வேட்பாளர் செந்தில் நாதனுக்கு ஆதரவாக தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

இந்த நிலையில் காலை 6:00 மணி முதல் இரவு 10 மணி வரை தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் மதிமுக வேட்பாளர் செந்தில் நாதனுக்கு தொகுதியில் உள்ள பெண்கள் ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

# திருவள்ளூரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.9 கோடி நகைகள் பறிமுதல்




திருவள்ளூர், ஏப்.13–

வாகன சோதனையின்போது, உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.9 கோடி மதிப்பிலான நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்கும் நடவடிக்கையாக தேர்தல் பறக்கும் படையினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் திருவள்ளூர் திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் லட்சுமாபுரம் பகுதியில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக சென்னையில் இருந்து திருப்பதி நோக்கி சென்ற சரக்கு வாகனத்தை பறக்கும் படையினர் நிறுத்தி சோதனை செய்தனர். அந்த வாகனத்தில் உரிய ஆவணங்களின்றி ரூ.8 கோடி மதிப்பிலான தங்க நகைகள், ரூ.1 கோடி மதிப்பிலான வெள்ளிப் பொருள்கள் ஆகியவை இருந்தது தெரியவந்தது.

மேலும், அந்த வாகனத்தில் வந்தவர்களிடம் விசாரணை செய்ததில் சென்னை கிண்டியில் செயல்பட்டு வரும் தனியார் நகை கடையில் இருந்து திருப்பதியில் உள்ள கிளைக்கு நகை,வெள்ளிப் பொருட்களை கொண்டு செல்வதாக பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பறிமுதல் செய்த நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை பாதுகாப்பாக கொண்டு சென்று திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் சு.ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அந்த நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை ஆய்வு செய்த தேர்தல் நடத்தும் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் சு.ரவிச்சந்திரன் கருவூலத்தில் ஒப்படைத்தார். அப்போது அவர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மீண்டும் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பு பகுதியிலிருந்து 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# ‘ஜன நாயகன்’ படம் இணையத்தில் லீக்கான விவகாரம் மொத்த உரிமையும் தயாரிப்பாளரிடமே இருக்கிறது:

## தணிக்கை வாரியம் விளக்கம்

சென்னை: ஏப்.13–

ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய், பாபி தியோல், மமிதா பைஜூ, பிரியாமணி உள்பட பலர் நடித்துள்ள படம், ‘ஜன நாயகன்’. இப்படத்தின் 5 நிமிட காட்சிகள் இணையத்தில் கசிந்தது. பிறகு சில மணி நேரங்களில் முழு படமும் இணையத்தில் கசிந்ததால் ரசிகர்களும், படக்குழுவினரும் அதிர்ச்சி அடைந்தனர். அரசியல் நோக்கத்துக்காக விஜய் தரப்பில் இருந்தே இப்படத்தை கசியவிட்டு இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

மேலும், மத்திய தணிக்கை வாரியத்தில் இருக்கும் யாரோ ஒருவரால் வெளியிடப்பட்டு இருக்கும் என்றும் ஒரு தரப்பினர் குற்றம் சாட்டினர். இந்நிலையில், ‘ஜன நாயகன்’ திரைப்பட கசிவு குறித்து மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியத்தின் (சிபிஎப்சி) அறிக்கையில் கூறியிருப்பதாவது: ‘ஜன நாயகன்’ படம் மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியத்தில் இருந்து கசிந்ததாக கூறப்படும் செய்திகள் தவறானவை மற்றும் ஆதாரமற்றவை.

சான்றிதழுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து திரையரங்கு படங்களுக்கும் பாதுகாப்பான கேடிஎம் (Key Delivery Message) என்ற முறை பின்பற்றப்படுகிறது. உள்ளடக்கத்துக்கான அணுகல் கடவுச்சொல் மூலம் அவை பாதுகாக்கப்படுகிறது. அந்த கடவுச்சொல்லானது அப்படத்தின் தயாரிப்பாளரிடமே முழுமையாக இருக்கும்.

உரிய கடவுச்சொல் இல்லாமல் படத்தை அணுகவோ, பார்க்கவோ முடியாது. ‘ஜன நாயகன்’ படத்தின் டிஜிட்டல் சினிமா தொகுப்பு (DCP), மார்ச் 17ம் தேதி அன்று மும்பையில் உரிய ஒப்புதலுடன் விண்ணப்பதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. அது அன்று முதல் அவர்களிடமே இருக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஒரே நேரத்தில் விடைத்தாள் மதிப்பீடு, தேர்தல் பணி: பணிச்சுமை என ஆசிரியர்கள் புகார்

சென்னை: ஏப்.13–

ஒரே நேரத்தில் விடைத்தாள் மதிப்பீடு, தேர்தல் பணிகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக ஆசிரியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு ஏப்.6ம் தேதி முடிவடைந்தது. மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஏப்.9ம் தேதி தொடங்கியது. இந்த பணிகளில் அரசு, நிதியுதவி மற்றும் தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஏப்.15ம் தேதி பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இதில் ஆசிரியர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டுமென தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. இந்நிலையில் விடைத்தாள் மதிப்பீடு, தேர்தல் பணிகளை மேற்கொள்வதால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாக ஆசிரியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஆசிரியர்கள் சிலர் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23ம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி விடைத்தாள் மதிப்பீட்டை ஏப்.20க்குள் முடிக்க திட்டமிட்டு பணியாற்றி வருகிறோம். இந்நிலையில் சில மாவட்டங்களில் தேர்தல் சார்ந்த பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்துவதில் இருந்து விடுவிக்கப்பட்டு, பூத் சிலிப் வழங்குதல் உள்ளிட்ட தேர்தல் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால் அங்குள்ள மையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்துக்குள் அவற்றை திருத்தி முடிக்க முடியாது என்பதுடன், இதர ஆசிரியர்களுக்கும் பணிச்சுமை ஏற்படும். மேலும், இரு பணிகளிலும் தொடர்ந்து ஈடுபடுவதால் ஆசிரியர்களிடம் தேவையற்ற குழப்பத்தை உருவாக்கியுள்ளது. எனவே இதற்கு மாற்று ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421